ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரஜோத்பத்தி௵ ஆடி மீ பகுதி எ.

Vol 8. July & August 1931. No. 7.

பசுபரிபாலனம்.*

பசுக்களின் பெருமையையும் அவை யிம்மை மறுமைப்பயனளித்தலையும் பற்றி ஸ்ரீமத்-சுப்பிரமணியக் கவிராயரவர்கள் சென்ற தைமாதச் "செந்தமிழில்" "பசுவைப்பற்றிய ஆராய்ச்சி" என்னும் வியாசத்திற் பற்பல மேற்கோள்களுடன் விரிவாகச்சொல்லிமுடித்தமையால் அவை நன்கு புலப்படுகின்றன.

அத்தகைய பசுக்களைப் பரிபாலித்தல் என்னும் கருமத்தைப் புண்ணியகருமமாகக்கருதுவோர் மாத்திரம் செய்யவேண்டுமென்பதன்றியே மக்கட் பிறப்புடைய எல்லோருமே செய்யக்கடன்பட்டிருக்கிறோம்.

கடனென்பது ஒருவரிடத்துப்பெற்ற தொன்றினளவிற் குறையாது மறித்தும் அவர்க்குக் கொடுத்துத் தீர்ததற்குரியது. அதனை அவ்வாறு கொடுத்துத் தீர்க்காதவர்களே இருணபாதகரென்று பழிக்கப்படுகிறார்கள்.

பசுக்களிடத்து நாம் பெற்றகடன் என்னவென்று பார்ப்போமானால் அவற்றால் நாம் உயிர்வாழ்ந்து வருகிறோமென்பது பின்வருவனவற்றால் நன்குவிளங்கும். ஆதலால் அவற்றின் உயிரோம்பல்

---

* இது "செந்தமிழ்"ப்பத்திரிகையில் ஸ்ரீ. உ. வே. திருநாராயணையங்கார் ஸ்வாமி அவர்களால் எழுதப்பெற்றது.

மக்கட்பிறப்புடைய நம்மெல்லோராலும் இறுக்கத்தகும் கடனெனவே கருதவேண்டும்.

பசுக்கள் மக்களாயுள்ள நம்மைக்குழவிப்பருவந்தொட்டுத் தாயினுஞ்சாலப் பால்கொடுத்துக் காப்பாற்றுகின்றன. இதுபற்றிப் போலும்; பசுவினை "என்னம்மைவந்தாள்" என்பது தகுமென இலக்கணநூலார் திணைவழுவமைக்கின்றனர். பசுமேய்ப்பாரை ஆயர் என்பதனால் அப்பசுக்களும் ஒருவாறு தாயின்றிரி சொல்லாகிய ஆயென்னும் பெயரால் வழங்கப்பட்டனபோலவும் விளங்குகின்றன. இச்சொற்குறிப்புகளாற் பசுக்களும் நாமும் தொன்றுதொட்டுத் தாயும் மக்களுமாகிய தொடர்பு பெற்றிருத்தல் விளங்குகின்றது.

நாம் வளரவளர அவற்றின்பால் நம் வயிற்றுப் பசிக்காற்றாமை பற்றிப் பசுக்கள் தம் ஆண் கன்றுகளை வளர்த்து உழவுமாடுகளாகவும், கமலையெருதுகளாகவும், வண்டிக்காளைகளாகவும் உதவி உழுதொழிலை நடத்தி நமக்கு அன்னமிட்டுவருகின்றன. அவ்வன்னத்துக் குபகாரமாக "வைத்தசெய்யும் காய்ந்தபாலும வடிதயிரும் நறுவெண்ணெயும்" படைத்து நம்மை வயிறாரவூட்டி வளர்த்துவருகின்றன.

அவை அரும்பாடுபட்டு விளைவித்த சாரமுள்ள தானியராசிகளை நாம்கவர்ந்துகொண்டு,சாரமற்ற பட்டதட்டைகளையும் கழிந்த வைக்குப்பைகளையும் அவற்றிற்கு இரையாகக்கொடுப்பினும் அவற்றையும் பசிதீர உண்பனபோல அவை மென்றுதின்று தண்ணீர்குடித்து விரைவில மட்கவைத்து எருக்குப்பையாக்கிக் கிருஷிக்கு உபகரிக்கும்படி மறித்தும் நமக்கே கொடுத்துவிடுகின்றன.

இம்மட்டில் அமையாது அவை உயிர்நீத்தபின்னும் அவற்றின் உறுப்பாகிய தோல்கள் "எந்தை நல்கூர்ந்தானிரப்பார்க் கீந்தென்றவன், மைந்தர்தம் மீகை மறுப்பரோ" வென்னும்படி உழவுவடமாகி ஏரிழுத்தும் கமலைவடமாகிச் சாலிழுத்தும், தோற்புரைகளாகித் தண்ணீரிறைத்தும், சாட்டைவார்களாகி மாட்டையோட்டியும், கிளிகடிபறையாகிப் புள்ளோப்பியும் கிருஷித்தொழிலுக்குதவி புரிந்து நம்பசிப்பிணி யகற்றுகின்றன.

அன்றியும், நம் காலிற்றைக்கும் முள்ளைத் தம்மேலிற்றைக்கும்படி பாதுகையாகித்தாங்கி நம்மைப் பாதுகாக்கின்றன.

"அன்பிலாரெல்லாந் தமக்குரிய ரன்புடையா, ரென்பு முரியர் பிறர்க்கு" என்னுந் திருக்குறளுக்கிலக்கியமாகப் பசுக்கள் என்பானும் நமக்கு உணவு மிகுமாறு பயிர்க்குணவாகின்றன.

அன்றியும் துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாகியும அமையும் மழையேபோலப் பசுக்களும் மக்களுக்கு வேண்டும் நல்லுணவுகளையாக்கி யளிப்பதோடமையாது தம்மையுண்ண விரும்பியவர்க்கும் இன்சுவையுணவாகி யவருடம்பை வளர்க்கத்தம்முடம்பை யிழக்கின்றன.

இங்ஙனம் "உள்ளியுள்ள வெலாமுவந்தீயுமவ், வள்ளியோரின் வழங்கு" மியல்புடைமையானன்றே. "வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற்பெரும்பசுக்கள்" என்றும் "மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்" என்றும் ஸ்ரீ ஆண்டாள் திவ்யசூக்திகளாலும் பசுக்களின் வள்ளற்றன்மை கொண்டாடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு தனக்கெனவாழாப்பிறர்க்குரிமை பூண்ட பெருந்தகைமையுடைமையாலும், மக்கட்கு உலகவாழ்க்கைக் கின்றியமையாத கிருஷிதொழிலுக்குதவிபுரிந்து மக்கட்டொகுதியைப் பாதுகாத்து இம்மைப் பயனளித்தலாலும், தூய்மையுடைமையாலும், புண்ணிய கருமங்களுக்கு உறுப்பாயமைந்து மறுமைப்பயனளித்தலாலும் பசுக்களிடத்துத் தெய்வத்தன்மையிருப்பதாகவே கொண்டு அவை நம் முன்னோரால் அன்புபாராட்டிப் போற்றி வளர்க்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் ஆன்றோரால் "வாழ்கவந்தணர் வானவர் ஆனினம்" என அந்தணரின்மிக்க வானவரின் மேலாகவும், "ஆவுமானியற் பார்ப்பனமாக்களும் பெண்டிரும் பிணியுடையீரும்" எனப் பெண்டிரின் மிக்க பார்ப்பனமாக்களின் முற்படவும் வைத்துக்கூறப்பட்டமையால் பசுக்கள் மக்களினும் தேவரினும் மேலாகவே மதிக்கப்பட்டனவாகவுங் காணப்படுகின்றன.

இவற்றை யறிந்திருந்தும் நம்மவரிற் சிலர் பசுக்களைப்போற்றுவது மூடபக்தியென்றும், அவற்றைத் தெய்வமாகக் கருதி மனிதர் சுதந்தரங்களையிழந்துவிடுதல் அவிவேகமென்றுஞ்சொல்லிப் பரிகசிக்கத்தலைப்பட்டுவருகின்றனர். அவர்க்கு நாமிப்போது சொல்வதொன்றும் அவர் காதிலேறப்போவதில்லை; ஏறுவிட்டாலும், பசு பரிபாலன விஷயமாக நமக்குத்தோன்றும் இன்றியமையாத சில சொல்லவேண்டிய விஷயங்களைச் சொல்லி முடிப்போம்.

அவரை, மூடபக்தியாவதென்ன? என்று கேட்போமாகில், உண்மையாக நமக்கு உதவிசெய்யாததொன்றை யுதவிசெய்ததாகக் கருதி அதனிடத்து அன்புபாராட்டல் என்று சொல்லுகிறார்கள். பசுக்களால் நாம் உதவிபெறவில்லை யென்பது உண்மையாகுமா? என்று கேட்போமானால் உதவிபெறுவது உண்மையானாலும் அது மனதுடன் கூடிய செயலில்லை யென்கிறார்கள். பழகியவர் அருகிலிருக்க பசு அவர் தினவுதீர நாவினால் வருடலும், பால்கறக்குங்கால் மடி சுரந்து நிற்றலும் மனதுடன் கூடிய செயலன்றோவென்று கேட்டால், மனதுடன்கூடியதானாலும் அது சுவைவிருப்பமும் பரிசின்பமுமாகிய தன்னயங்கருதியசெயலென்று சொல்லுகிறார்கள். அங்ஙனமாயின் தாய்தந்தையர் மைந்தரை வளர்த்தலும் தாம் தளர்ந்தகாலத்திலுதவுதலென்னும் தன்னயங்கருதிய செயலாய் முடிதலால் அவர்களிடத்து நன்றியறிதலோடுகூடி யன்புபாராட்டலும் அவர்க்கு மூடபக்தியாகும். இம்மட்டிலொழியாது, மனைவாழ்க்கை நலனுகர்ச்சியும், காதலரிருவர்க்கும் இன்பமாகிய சுயநயச்செயலாதல்பற்றி அவ்விருவரதன்பும் மூடபக்தியாக முடியுமாதலால அவர்காணும் மெய்யன்பு யாங்குளதோ. இது நிற்க,

அவற்றைத் தெய்வமாகக்கருதி மனிதர் சுதந்தரத்தையிழத்தல் அவிவேகமென்று சொல்லுகிறார்களே? அது எவன சுதந்தரம்? என்று விசாரிப்போமானால், வேண்டியவிடத்துப் பசுக்களைத் தமக்கு உணவாகவும் பயன்படுத்தல்தான் என்கிறார்கள். ஐயோ பாவம்; இந்நாட்டில் இந்த பசுத்தசையுணவி லுரிமையிழவாத சிறுபான்மையோரடைந்த பெருமையென்ன? அதிலுரிமையிழந்த பெரும் பாலோரெய்திய சிறுமையென்ன? இதெப்படியாயினுமாகுக.

ஒத்தபிறப்பினையுடைய மக்கட்கெல்லாம் இயற்கையினமைந்துள்ள இவ்வுரிமையை இந்நாட்டிற் பெரும்பாலோர் இழந்திருக்கின்றமை உண்மையே. அவர் தாம் ஏனிழக்கவேண்டும்? என்று கேட்டால் ஊனுண்ணல் பாவம் என்று முன்னோரெழுதிவைத்த சுவடிகளை நம்பி யிழந்திருப்பதாகச் சிலர் சொல்ல வருகிறார்கள். அக்காரணமாக நம் முரிமையை யிழக்கச்சொல்லுஞ் சுவடிகளிருந்தால் அவற்றை நம்பி நாம்மோசம்போகவேண்டாம். அச்சுவடிகளைக் கட்டிவைத்துக்கொண்டே பேசுவோம். ஒருவனுமுண்ணாதவர்கள் சிலர் வேண்டுமானால் அச்சுவடிகளை நம்பி யிழந்திருப்பதாகவைத்துக் கொண்டாலும், ஆடு முதலிய பிற மிருகங்களையுண்ணும் பெரும்பாலோரும் இதையிழந்திருப்பதற்கு இது காரணமாகமாட்டாது. ஏதேனும் ஒருகாரணம் பற்றியே நாம் இவ்வுரிமையிழந்திருக்க வேண்டும். அது இன்னதென்பதுதான் இப்போது ஆராயவேண்டியது. அதை நாம் ஆராய்ந்தறியாது சும்மாவிடப்படாது. அக்காரணமாகத் தம் உரிமையை யிழப்பதற்கு யார் தான் சம்மதிப்பார்?

இனி நாம் உரிமையிழக்கு மிடங்களையாராய்வோம்.

1. விலைக்குவிற்றபொருளினுரிமையிழக்கிறோம்.
2. வலியோரால் கவரப்பட்டபொருளை மீட்கவலியில்லையாயின் அப்பொருளினுரிமையிழக்கிறோம்.
3. மனமுவந்து பிறர்க்குக்கொடுத்துவிட்டபொருளினுரிமையிழக்கிறோம்.
4. பயன்படாதபொருளில் அநாதரவா லுரிமையிழக்கிறோம்.
5. ஒன்றன் உரிமை கேடுபயக்குமாயின் அக்கேட்டில் நீங்க வேண்டி அவ்வுரிமையிழக்கிறோம்.

இத்தகைய உரிமைக்கேடுகளுள் எடுத்துக்கொண்ட பசுத்தசையுணவின் உரிமைக்கேடு எதுபற்றியதென ஆராய்வோம். இவ்வுரிமையிழந்தோர்க்கெல்லாம் ஒத்த விலைப்பொருள் பிறரொருவராலுங் கொடுக்கப்படாமையால் விலைபெற்றிழந்ததன்று. இழந்தார்மீட்டும் துய்ப்பின் அநுபவமுடையார் தடைசெய்யாமையால் வலியோரால் கவரப்பட்டிழந்ததுமன்று. இழந்தார் துய்ப்பாரை அருவருத்த

லான் மனமுவந்து கொடுத்திருந்ததுமன்று. துய்ப்பதற்குரியதாத லாற் பயன்படாமையா லிருந்ததுமன்று. ஆகவே எஞ்சியகேடுபயத் தல்பற்றியே பெரும்பான்மையோர் பசுத்தசையுணவினுரிமையிழந் திருக்கவேண்டும். அக்கேடு இன்னதென்பதும் நம் நாட்டிலுள்ள அநுபவங்களைக்கொண்டே யறியலாம்.

இற்றைக்கு முப்பது வருடங்கட்கு முன்பிருந்ததைவிட இப் பொழுது எருத்தின்விலை இரண்டுபங்கு அதிகப்பட்டிருக்கிறதென் பது யாராலும் மறுக்கமுடியாது. அதற்குக்காரணம் என்னவென் றால் மற்றைப் பொருள்களுக்கெல்லாம் விலையதிகப்பட்டிருப்பது போல இதற்கும் இக்காலத்தில் விலையதிகப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அப்படியானால் நாய்விலை, கழுதைவிலைகளும் அதிகப்பட்டிருக்கவேண்டுமே! அவையேன் அதிகப்படவில்லையென் பதைக் கவனிக்கவேண்டும். அவை எருதுகள்போல வேலைக்குப் பயன்படாமையால் விலையதிகப்படவில்லையென்று தோன்றலாம். அதை உண்மையாகவே வைத்துக்கொள்வோமாகுலும் பண்டைக் காலத்தை விட இக்காலத்திற் பதின்மடங்கு மிகுதியாய் உபயோ கிக்கப்பட்டு வருகிற குதிரைவிலையும் மாட்டுவிலைபோல இரண்டு பங்கு மேற்பட்டிருப்பதாகக் காணப்படவில்லை. வேலைக்குப்பயன் படாத ஆட்டுவிலையும் மாட்டுவிலைபோலதிகப்பட்டு வருகிறது. காட் டப்பட்ட ஐந்துவகை மிருகங்களில் உண்ணப்படாத நாய் கழுதை குதிரை யெனவும் மூன்றுவகை மிருகங்கள்மட்டும் பண்டைக் காலத்து விலையின் மிக உயராமலும், உண்ணப்படும் ஆடுமாடுக ளிரண்டும்பண்டைக்கால விலையினதிகப்பட்டும் வருகின்றன. இவை போலவே மற்றை யுணவுப்பொருள்களின் விலையுமதிகப்பட்டிருக் கின்றன.

பொதுவாக விலையுயர்தற்குக்காரணம் கொள்பவரின் வேட்கை மிகுதியும், கொள்ளப்படுபொருளின் கிடைத்தற்கருமையுமாகிய இவ்விரண்டன் கூட்டமேயல்லது பிறிதில்லை. இதற்குத்தான் "கிராக்கி" என்று பெயரிட்டு வழங்குகிறார்கள். நாளடைவில் உழு ங்குடிகள் மிகுந்துவருவதுபற்றிக் கொள்பவரின் வேட்கைமிகுதி யால் கிராக்கியுண்டாய் மாட்டுவிலை யுயர்ந்துவிட்டதோவென்று

பார்ப்போம். கொள்பவர்களாகிய மனிதர் தொகை நாளடைவில் மிகுவதுபோலக் கொள்ளப்படும் எருத்தின்தொகையும் அதின் மும் மடங்கு மிகுந்து வரவேண்டுவது இயல்பு. அப்படி மிகுந்திருக்கு மாகில் கிராக்கியுண்டாக மாட்டாது. அன்றியும், கிராமங்கள் தோறும் ஜனத்தொகையும் பட்டாதம்பர்களும் மிகுந்துவருவது உண்மையே. அதுபோலஉழப்படும் நிலப்பரப்பும், உழுபெருது களின் தொகையும் மிகுந்துவிடவில்லை. அநாதிதரிசு நிலங்களின் பற்றடைப்புகளால் பயிரிடும் நிலங்கள் சொற்பம் மிகுந்திருந்தாலும் புகைவண்டிப்பாதை முதலிய உபயோகங்களுக்குவிடப்பட்ட பயிரி டும் நிலங்களின் கழிவு அதற்கு ஈடாயிருக்கிறது. கிணறுகள் அதி கப்பட்டுவருவதால் இறைவை மாடுகளதிகம் வேண்டுதலாற் கிராக்கி யுண்டாயிற்றென்று யோசிப்போமாகில் கிணறில்லாத நிலங்களுக்கு வேண்டிய உழவுமாடுகளைக்கொண்டே மழையில்லாதகாலங்களில் கிணற்று நீரிறைக்கிறுர்களாகையால் அதனாலும் கிராக்கியுண்டாக வில்லையென்று தோனறுகிறது. ஒருவாறு கிணற்றிறைவைமிகுதி யாற் கிராக்கியுண்டாகிறதென்று வைத்துக்கொண்டாலும், புகை வண்டிப்பாதைகள் மிகுந்துவருவதால் வண்டிவேலை யிழந்தமாடு களும் கரும்பாலை முதலியவைகளின் எந்திரசகாயத்தால் அவ்வவ் வேலையொழிந்தமாடுகளும் அக்கிராக்கிக்குக் கண்டுமிகும்படி ஈடா யிருக்கின்றன. ஆதலால் கொள்பவரின மிகுதியாற்கிராக்கி ஏற் பட்டதாகக் காணப்படவில்லை.

இனி, கொள்ளப்படும் எருதுகளின ஜனனக்குறைவால் கிராக்கி ஏற்பட்டிருக்கக்கூடுமாவென்று பார்ப்போம், "எருமை எட்டீற்று பசுப்பத்தீற்று" என வழங்கும் பழமொழியாலும், அநு பவத்தாலும் மனிதர் ஈற்றுத்தொகையில் மாட்டின் ஈற்றுத்தொகை ஒத்திருப்பதாகவே காணப்படுகிறது. சிறிதுகுறையுமென்று வைத் துக்கொண்டாலும் மனிதரைப்போல மாடுகளுக்கு விவாகமின்மை வைதவ்வியம் முதலிய ஈற்றின் இடையூறுகளில்லாமையால் ஈற்றின் நிரக்குமொத்தத்தொகை யொத்திருக்கலாமென்றே தோன்றுகின் றது. மேலும் மனிதர்தலைமுறை ஒன்றுக்குள் மாட்டின்தலைமுறை மூன்றின் மேற்பட்டுவிருத்தியடைகிறபடியால் அம்மூன்றுதலைமுறை

ஈற்றையும் கூட்டிக்கணக்கிட்டுப்பார்க்க மனிதர் அதிகப்பட்டுவரும் தொகையின் ஈளுப்படி மூன்றுபங்குக்குமேல் அதிகப்பட்டு வர வேண்டும். அதாவது முப்பது ஸூத்தில் மனிதர் தொகை 100-க்கு 10-அதிகமானல் மாட்டின் தொகை அதேகாலத்தில 100-க்கு 30-க்கு மேல் அதிகப்பட்டு வரவேண்டுமென்பதாம். மனிதரள வாக 100-க்கு 10-அதிகப்பட்டு வந்திருந்தாலும் கிராக்கியுண்டா யிருக்கமாட்டாது. கிராக்கியுண்டாயிருப்பதால மனிதர் மிகுந்து வரும் தொகையிலும் மாடுகள் மிகுந்தொகை குறைவுடையதாகக் காணப்படுகிறது. அதாவது 130-க்கு மேலிருக்கவேண்டிய பசுக் களின் தொகை 110-க்கும் குறைந்துவருகிறதென்பதாம்.

இவ்வாறவை குறைந்துவருவதற்குக் காரணமென்னவென்று பார்த்தால் சிலர் அவற்றைக் கொன்றுதின்று வருதலின்றிப பிறி தொன்றுமில்லை என்று நன்குவிளங்குகிறது.

இது நம்மாலின்று கண்டுகொண்டதன்று. பண்டைக்காலத் தோரே கண்டதென்பதை "உண்ணுமையுள்ளதுயிர்நிலை" எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்பொய்யாமொழிவெளியிடுகின்றது. இத்திருக்குறளுக்கு, உரையெழுதிய பரிமேலழகர் "ஒருசாருயிர் உடம்பின் கண்ணேநிற்றல் ஊனுண்ணுமையென்கின்ற அறத்தின் கண்ணது" என்று உரையெழுதி, "உண்ணப்படும் விலங்குகள் சில வாக ஏனையபல வாய் வருதலின் உண்ணுமையுள்ளதுயிர் நிலையென் ருர்" என்று விசேடவுரையுமெழுதிப் போந்தார்.

இதனுலும் உண்ணப்படும் விலங்குகளாகிய ஆடுமாடுகள் குறைந்து வருகிறதென்றும், உண்ணபபடாத விலங்குகளாகிய கழுதை, குதிரை, நாய்கள் குறையவில்லையென்றும் விளங்குகின் றது. இவ்வாறு குறைவதால் மாட்டுவிலை யேற்றம் பெற்றிருக் கிறது. மாட்டுவிலையேற்றம்பற்றி மட்டும் இப்பொழுது அங்கவிலை நூற்றுக்கு முப்பது ஏற்றம் பெற்றிருப்பதாகவும் ஒருவாறு கணக் கிடப்பட்டிருக்கிறது.

அது வருமாறு:—முப்பது வருடங்கட்குமுன்பு ஓர் ஏர்மாட் டின் விலை 30 ரூ. முதல் 150 ரூ வரை யிருந்தபடியால் அதன்

நிரவல் (average) விலை ஏர் 1-க்கு ரூ. 90 ஆக இருந்தது. இப்பொழுது ஏர் 1-க்கு 90-முதல் ரூ. 300-வரை விலையேறியிருப்பதால் இதன் நிரவல்விலை ஏர் ஒன்றுக்கு ரூ. 180 ஆகிறது. ஆகவே ஏர் 1-க்கு ரூ. 90 அதிகப்பட்டிருக்கிறது. எருதுகள் வேலைக்குதவாத கன்றுப்பருவமும் கிழப்பருவமும் ஒழிந்த வேலைசெய்யும் வருடம் பத்துக்குள் நோய் முதலியவற்றால் அகாலமரணங்களுமிருப்பதால் ஏர் 1-க்கு 5-வருடமே வேலைசெய்யுங் காலநிரவல் ஏற்படுகிறது.

இந்த ஐந்து வருடத்திலுங்கூடி ஓர் ஏர் எருத்தின்விலை யேற்றத்திற் கூடிய ரூ. 90-ம நஷ்டமாய்விடுவதுபற்றி வருஷம் 1-க்கு ஏர் 1-க்கு 18 ரூ. அதிகச்செலவேற்பட்டிருக்கிறது. இந்த அதிகச்செலவு ரூ. 18-ம் அவ்வேராலே ஒருவருடத்தில் விளைவிக்கப்படும் தானியங்களில் கிருஷிகர்களின் குடும்பவுணவுக்குப்பாதியும் உரமிடல், விதைப்பு, களைபறி முதலிய கூலியில்தானியமாகச்செலவாகும் காற்பங்கும் போக மீந்தகாற்பங்கு (நிரவல் 600 பட்டணம்படி) தானியத்தின் விலையை ஏற்றிவிற்றே கிருஷிகர்கள் முதலெடுக்க வேண்டியிருப்பதால் மாட்டுவிலை யேற்றத்தால மட்டும் கோட்டை 1-க்கு (பட்டணம்படி 96-க்கு) 3-ரூ. கூட்டி விற்கப்படுகிறதென்பது நன்கு புலப்படுகின்றது.

ஆகையால் விலைக்குவாங்கி யுண்பவர்கள் நாளொன்றுக்கு ஆள் ஒன்றுக்கு அரைப்படிக்கு காலணுவீதம் இப்பொழுது அதிக விலை கொடுத்து வருகிறார்கள். இன்னும் பசுத்தசையுணவு வளர வளர அஃகவிலையேற்றமும் வளருமென்பதிற் றடையில்லை. இதுநிற்க,

இந்நாட்டிலுள்ள ஜனங்களிற் சற்றேறக்குறைய ஐந்திலொரு பங்கு ஜனங்களே பசுக்களையுண்ணு முரிமையுடையவராயிருக்கிறார்கள். இந்த 5-ல்ஒருபங்கு ஜனங்களால் 30-வருஷத்தில் சுமார் 100-க்கு 20-வீதம் பசுக்கள் உண்ணப்பட்டுக் குறைந்து வருகிறபடியால் மற்றை நாலுபங்கு ஜனங்களும் இந்தச் சுதந்தரத்தை இழவாது கைக்கொண்டிருந்தால் மொத்தப்பங்கு ஐந்துக்குமாக 100-க்கு 100-ம் உண்ணப்பட்டுத் தொலைந்திருக்குமென்பதிற் றடையொன்

றுமில்லை. இப்படியாகப் பசுக்கள் தொலையத்தலைப்படுங்கால் உழவு எருதுகள் குறையும்; எருதுகள் குறையவே கிருஷித்தொழில் குன்றும்; கிருஷித்தொழில்குன்ற உணவுப்பொருள் குன்றும்; உணவுபபொருள்குன்றப் பசிபபிணிவளரும்; பசிப்பிணி வளரவே "மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை...... பசிவந்திடப் பறந்துபோம்" என்றபடி மக்கட்டொகுதியிலுள்ள நற்குண நற்செயல்களெல்லாம் அழியும். அவையழியவே அதன்கண் தீக்குணம், தீச்செய்கை தோன்றிக் களவு, ஆறலைத்தல், சூறைகோள், கொலைமுதலியவற்றால மக்கட்டொகுதிக்குக் கேடுபிறக்கும். பசுத்தசையுணவு இத்தகைய கேடு விளைத்தலை யுணர்ந்து இக்கேட்டினின்றும் நீங்கவேண்டியே நம்மவரிற் பெரும்பாலோர் பண்டைக்காலத்தே அதனுரிமை யிழந்திருக்கவேண்டு மென்பது நன்கு விளங்குகின்றது. பசுக்களையடுத்து எருமையும் சில இடங்களில் கிருஷிக்குப்பயன்படுதல்பற்றி அவையும் குறையாது பெருகவேண்டு மெனனுங்கருததாலன்றே அவற்றினூனுண்ணலையும் இதனொடொப்ப விலக்கியிருக்கின்றனர்.

இந்நாட்டிற் பெரும்பாலோர் இவ்வாறு பசுத்தசைநசையை யொழித்திராவிட்டால் இதுவரைஜனசமூகம் எப்படிநிலைத்திருக்கும்? இவர்கள் அவற்றையுண்ணாமைபற்றியே பசுக்களும் ஜனசமூகமும் நிலைத்திருக்கிறபடியால் இவர்களே பசுக்களையும் ஜனசமூகத்தையும் பாதுகாப்பாராகிறார்கள்.

இவ்வாறு பசுத்தசையுணவு ஜனவாழ்க்கைக்கு விரோதமாதல் பற்றி இந்நாட்டுப்பழங்குடிகளில உயர்குலத்தினரெல்லாம் அதனையொழித்திருக்கின்றமையால் அந்நெறிகடந்துண்பவர்கள இழிகுலத்தினராக்ப் பிரிக்கப்பட்டு வேறுபட்டிருக்கிறார்கள். இங்ஙனம் வேறுபாடிருந்தாலும் ஒருவர்க்கொருவர் மாறுபாடின்றி யிருபாலாரும் கூடிவாழ்ந்து வருகின்றனர்.

அவவாறவரமைவுற்றிருப்பவும் புதிய சீர்திருத்தம்புரியவிரும்புவார் சிலர்சாதிவேறுபாடுகருதுவது தீதென்றும், அது ஜனங்களுக்குள் மாற்சரியத்தை விளைவிக்குமென்றும் நினைந்து, அதுதீரச் சாதி

வேற்றுமையின்றி யொன்றுசேர்ந்துண்டு கொண்டு கொடுத்து ஒன்ருய்விட வேண்டுமென்றெண்ணுகிருர்கள். சாதிவேற்றுமைகளைப் பற்றி யிப்பொழுது பேசுவது சாத்தியமாகமாட்டாது. அதுசமயம் வாய்த்தபொழுது தனியே பேசவேண்டிய பெரியவிஷயம். அது நிற்க, ஒன்ருகக்கூடியுண்பவர்களெல்லாம் மாற்சரியமற்றிருக்கிருர்களா? ஒரு குலத்திற்பிறந்து ஒன்ருயுண்டுவளர்ந்த கௌரவ பாண்டவர்களின் பகைமையும், ஒன்ருயுண்ணுத இராமபிரானிடம் குக விபீஷணர்களின் ஆர்வமும் இதிகாசங்களால் விளங்கவில்லையா? இவை கதையென்றுலும் ஒரு வயிற்றிற் பிறந்து ஒன்ருயுண்டு வளர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் மாற்சரியங்கொண்டு நியாய ஸ்தலங்களிற் சென்று பொருட்செலவு செய்து வழக்கிட்டுப் பகை கொள்ளக் காண்டலால் ஒன்ருயுண்ணலே யொற்றுமையுண்டாக்குமென்றெப்படிச் சொல்லலாம்? ஒன்ருயுண்ணுத நாயும் நாயுடையோரும் அந்நியோந்நியம் ஒற்றுமையுடன் அன்புபாராட்டவும் காண்டலால் ஒன்ருயுண்ணுமையால் மாற்சரியமுண்டாகுமென்றெப்படிச்சொல்லலாம்? ஒன்ருயுண்ணுதலே ஒற்மையைஉண்டாக்கிவிடவில்லை; பரஸ்பராபிமானமே யொற்றுமையை யுண்டாக்குகின்றது.

இதனுல் அவர்கள் ஒன்ருகக்கூடி யுண்ணவேண்டாமென்று சொல்லித் தடுக்கவந்ததாக நினைக்கவேண்டும். அதனுல் தீமைவிளையுமென்பதையவர்க் குணர்த்தவந்ததாக நினைக்கவேண்டும். ஒன்ருயுண்ணலால் என்னதீமைவிளையுமென்று கேட்கக்கூடும். உண்டியில் அவர்களுக்கு விருப்பமுள்ள பசுத்தசையை யிவர்களும் உண்டுதீர வேண்டுமல்லவா? உண்ணுவிட்டால் வேற்றுமையெப்படி ஒழியும்? வேற்றுமையொழியத்தாமும் உண்பாராயின் அவரைப் பற்றிய பிறரும், அவரைப்பற்றி மற்றவருஞ்சேர்ந்து பெருங்கூட்டமாக எல்லோரும் பசுத்தசையுண்ணத் தலைப்பட்டுவிடுவார்கள். அதனுல் பசுத்தொகைகுன்றிக் கிருஷித்தொழிலின்றி ஜன சமூகத்துக்குக். கேடுவரக்கூடுமென்பதை அவர்கள் கவனிக்க வேண்டும்.

நாளடைவில் வளர்ந்துவருகிற அறிவின் முதிர்ச்சியால் இந் நாட்டில் இழிந்தவர்களும் ஜாதிவேறுபாட்டையழித்து உயர்வடைய

முயல்கின்றனர். அவ்வாறுயரவிரும்புவோர் தாம் இழிந்ததற்கேதுவாகிய பசுத்தசையுணவையொழித்துப் பசுபரிபாலனஞ்செய்யக்கருதுவாராயின் அதிசீக்கிரத்தில் உயர்வடைவார்களென்பதிற்றடையிற்லை. இழிந்தவர்கள் உயர்வடைவதற்குப் பசுபரிபாலனம் மேலான உபாயமாகக் காணப்படுகிறது.

பிர்ம்மகத்தி முதலிய கொலைப்பாவங்களுக்கெல்லாம் பசுபரிபாலனம் முதன்மையான பிராயச்சித்தமாக விதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றோடொத்த பசுவதைக்கும் பசுபரிபாலனங் கழுவாயாகுமென்பதிற் றடையென்ன? பசுபரிபாலனம் ஜனசமூகத்துக்கு நன்மை விளைப்பதுபற்றிப் புண்ணியகருமங்களிலெல்லாம் மேலானதாக விளங்குகின்றது. ஆதலால் அதற்கு மறுதலையான பசுவதை பாப கருமமாகின்றது.

மனிதருக்கு உபயோகப்படுவனவெல்லாம் கொள்ளத்தகுவனவென்றும் ஆதலால், பசுக்களை உணவுக்குவதைத்தல் பாவமில்லையென்றும் வேறுசிலர் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுகிறபடி பாவமில்லையென்றே வைத்துக்கொள்ளட்டும். ஊருணி நீர் கால் கழுவவும், அழுக்காடை துவைத்துக் குளிக்கவும் மனிதர்க்கு உபயோகப்படுமானாலும், அவ்வாறு செய்தலால் குடிதண்ணீர்கெட்டு ஜனவாழ்க்கைக்கு விரோதமாதல்பற்றி அதனுட் குளித்தல் முதலியவற்றை ஒழிக்க முயல்வது போலவே, பசுவதையால் பசுக்கள் கெட்டு ஜனவாழ்க்கைக்கு விரோதமாதல் பற்றி அதனையொழித்துப் பசுபரிபாலனம் செய்யவேண்டுமென்பதை அவருணரவேண்டும்.

பசுபரிபாலனம் செய்வது அரியகாரியமென்று கருதவேண்டாம். பசுக்களுக்குத் தீங்குசெய்யாது சும்மாவிருத்தலும் பசுபரிபாலனத்துள் முதலாவதாக வைத்தெண்ணப்படுகிறது. ஒருவன் பசிக்குண்ணும் பாலே அவன் பிணிக்கும் மருந்தானாற்போலவும், பட்டினிவிட்டுண்ணு முணவுபாரணையாகிப் பயனளிப்பதுபோலவும் ஒருவன் தறகாத்தற்பொருட்டுத் தானேவிரும்பிச்செய்யும் பசுரக்ஷணமும் புண்ணியகர்மமாகி நற்கதிகொடுக்கின்றது. மற்றைப்புண்ணியகர்மங்களைப்போல் வர்ணாச்சிரமதேசகால நிபந்தன

மொன்றுமின்றியேபசுபரிபாலனம் உயர்ந்தோர் இழிந்தோர் எல்லோராலும் எங்கும் எக்காலத்தும் செய்யத்தக்க எளிமையுடையதாயுமிருக்கிறது.

தன்னை யிளைப்பாறவைத்துப் பசுக்கள் ஜனாக்ஷணம் செய்வது பற்றியே லோகரக்ஷகனை சர்வேச்வரன் கிருஷ்ணவதாரத்தில் "குன்றெடுத்தானிரை காத்தபிரான் கோவலனாய்க் குழலூதியூதிக் கன்றுகள்மேய்த்துத் தன்றோழரோடுகலந்துடன்வருவான்" எனப் பெரியாழ்வார் புறப்பாட்டு விருதுபாடும்படி கோக்களை ரக்ஷித்துக் கோபாலனெனப் பெயர்பெற விரும்பினனென்றாற்பசுபரிபாலனத்தின்பெருமை எவ்வளவிற்றென்று கணக்கிடலாம். அன்றியும் "பெற்றம்மேய்த்துண்ணுங் குலத்திற்பிறந்துநீ குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது" என ஸ்ரீ ஆண்டாள் திவ்யசூக்தி பெற்றம் மேய்த்தல்பற்றிலோகரக்ஷகனுக்கு ஏற்றம் சொல்லுகிறது. இதில் உண்பதற்குத் தேவபூஜை பூர்வாங்கமாகச் செய்யப்படுவதுபோலப் பெற்றம் மேய்த்தலும் உண்பதற்குப் பூர்வாங்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனை "கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந்துண்போம்" என்றதனாலுமறியலாம்.

இதனால், பசுபரிபாலனம் தேவபூஜையோடொப்பாகுமென்பது விளங்குகின்றது. இதையாவருஞ்செய்து தீரவேண்டுமென்பது 'ஆவிற்கு நீரென்றிரப்பினும்' என்னும் திருவள்ளுவர்குறிப்பால் நன்கு விளங்குகின்றது. விலங்காய்ப் பிறந்த பசுக்கள் தம் மின்மிக்க மக்களைப்பாதுகாப்பது கண்டும், மக்களாய்ப்பிறந்த நாம் அவற்றைப்பாதுகாவாது செல்வது நமக்கே வெட்கக்கரத்தக்கது. புண்ணியகருமமென்றெண்ணிப் பசுபரிபாலனம் செய்பவர்களுக்கு நாமென்றும் சொல்லவேண்டுவதில்லை; புண்ணியகர்மமென்று கருதாதவர்களும் ஜனவாழ்க்கைக்குத் தீங்குவிளையுமுன்னமே காலந்தாழ்க்காது பசுபரிபாலனம் செய்யத்தொடங்க வேண்டுமென்பது தான் இப்பொழுது சொல்லிமுடித்த விஷயம்.

ஆகையால், ஜனசம்ரக்ஷணத்தில் கண்ணும் கருத்துமுள்ள அறிவுடையோர்கள் இவற்றையாராய்ந்தறிந்து பசுக்கள்குன்றுதலின்றி வளர்ந்தோங்குமாறு பலவழிகளாலும் வேண்டியமுறைகளைக் கற்பித்துப்பாதுகாக்குமாறு வேண்டுவோமாக.

ஸ்ரீ:

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

—:0:—

(முன் 40-ம் பக்கத்தொடர்ச்சி).

ரு-ம் திருவாய்மொழி—வீற்றிருந்து.

கூ-ம் பாட்டு—கரியமேனி.

(43) திருவேங்கடமுடையான் ஸந்நிதியிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் "திருமங்கையாழ்வார் தேவரீரைப்பாடினாரென்றொரு வ்யாஜ மாத்ரம். 'அருள்மாரி யரட்டமுக்கியடையார் சீயம் கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன' என்று தொடங்கித் தம்முடைய வைபவங்களைத் திரளச் சொல்லிப் பாடிக்கொண்டார்காணும்" என்ன, 'ஆனாலது கேட்டாயில்லையோ, அவர் நம்மை ஆச்ரயிப்பதற்கு முன்பு தம்மைப் பாடிக் கொண்டாடினாரில்லையே, நம்மை ஆச்ரயித்த பின்பு தம்மைக்கொண்டாடிற்றெல்லாம் நம்முடைய வைபவத்தைச் சொன்னபடிகாண்' என்றருளிச்செய்தார்.

---

(43) 'உரியசொல்லாலிசைமாலைகளேத்தி' (சீரிய சொற்களால் இசைகளோடுகூடிய மாலைகளால் துதிசெய்து) என்றாழ்வார் தாமருளியமொழிகளைச் சிறப்பித்துரைப்பது பொருந்துமோ? என்பதற்குச்சமாதானமாக இவ்வரலாறு அரும்பதத்திலுரைக்கப்பட்டுளது. வியாஜமாத்திரம்-போலிக்காரணமாத்திரம். அருள்மாரி முதலியவையெல்லாம் திருமங்கயாழ்வாருடைய திருநாமங்கள். அருள்மாரி-அருள்வர்ஷம். அரட்டமுக்கி-பிறருடைய அரட்டைப் போக்குகின்றவர். [அரட்டு-அச்சம்.] அடையார் சீயம்-பகைவர்கட்குச் சிங்கம் போன்றவர். கொங்குமலர்க் குழலியர்வேள்-தேனுற்ற மலரணிந்த கூந்தலையுடைய பெண்கட்கு மன்மதன் போன்றவர். மங்கைவேந்தன்-திருமங்கை என்ற நாட்டிற்கரசர். கொற்றவேல் பரகாலன்-பிறசமயிகட்கு எமன்போன்ற வெற்றியுற்ற வேலாயுதத்தை யுடையவர். கலியன்-வலிமையுடையவர். எம்பெருமான்றன்னை யடைவதற்கு முன்பு எவரேனும் தம்மைக் குறித்துரைத்தால் அது தற்புகழ்ச்சியின்பாற்படும். அவன்றன்னை யடைந்தபிறகு அந்த ராஜகுல மஹாத்மியத்தாலே தம்மைப் புகழ்ந்துரைப்பதெல்லாம அவன்றன்னைச்சார்ந்ததாமாதலால் இங்குத் திருவேங்கடமுடையான் 'நம்மை ஆச்ரயித்த பின்பு தம்மைக்கொண்டாடிற்றெல்லாம் நம்முடைய வைபவத்தைச் சொன்னபடிகாண்' என்றருளிச்செய்தார்.

கூ-ம் திருவாய்மொழி—தீர்ப்பாரை.

ப்ரவேசம்.

(44) எம்பார் கீழ்த்திருவாய்மொழியையும் இத்திருவாய்மொழியையும் அநுஸந்தித்து, 'மோருள்ளதனையும் சோறேயோ ; அதிலே அப்படி நிரவதிக ப்ரீதியாய்ச் சென்றது. இதிலே இப்படி மோஹதமோடே தலைக்கட்டிற்று. இதுக்கிருந்தவைவு சொல்லுவேனே; இதுக்கு அசங்கதிரேவசங்கதி'; என்றருளிச்செய்வராம்.

---

(44) "வீற்றிருந்து" என்ற திருவாய்மொழியில் ஆழ்வாருடைய அபேக்ஷை நிறைவேறும்படி ஸர்வேச்வரன் நித்ய விபூதியையும் லீலா விபூதியையுமுடையவனாயிருக்கிற தன் படிகளில் ஒன்றுங்குறையாதிருக்கின்ற நிலைமையைக் காட்டக்கண்டு, 'இனி எவ்விடத்திலும் எனனொடொப்பாரில்லை' என்று ஆழ்வார் மகிழ்வெய்தினர். இந்தத் "தீர்ப்பாரை" என்ற திருவாய்மொழியில் ஆழ்வார் எமபெருமானைக் காணப்பெறாமையால மயங்கி மிக்க இன்னாப்புறுகிறார் என்ற விடத்தில் இவ்வரலாறுரைக்கப் பெற்றுளது. "மோருள்ளதனையுஞ் சோறேயோ" என்பது ஓர் விருத்தாந்தத்தைக் குறிப்பிடுகிற வாகயம். அஃதாவது :—

ஒருவன் நாழியரிசியைக கொண்டுபோய் ஒரு அம்மையாரிடங்கொடுத்து 'அம்மே! எனக்கிதனைச் சமைத்திடவேண்டும்' என்று கேட்டுக்கொண்டனன். அமமையாரும் அதற்குடன்பட்டு அதனைச்சமைத்து உண் கலத்திலிட்டு உண்ணென்றனள். அவனும் பக்கத்தில் மோரை வைத்துக்கொண்டு வார்த்து அம்மையாரே! மோர் மிஞ்சிற்று, சோறிடும் சோறிடுமெனறு பலகாலுங் கேட்டனன. அமமையாரும் அவனை நோக்கி நீ மோர் மிகுதியாகக் கொண்டுவந்திருக்கிறாய், நீ கொடுத்த நாழியரிசிக்குரிய சோறிடுவேனேயன்றி, மோருள்ளதனையுஞ் சோறிடவேண்டுமென்பதற்கியாதியையுளது? எனறனளெனபதாம். முன்புள்ள திருவாய்மொழிகளெல்லாம் ஒன்றிற்கொனறு இயைபுடையதாயிருப்பது போல இந்த "வீற்றிருந்து" என்ற திருவாய்மொழிக்கும், "தீர்ப்பாரை" என்ற திருவாய்மொழிக்கும ஒன்றிற்கொன்று சாலவுமியைபின்றியிருப்பதால் அசஙகதிரேவ சங்கதி என்றருளிச்செய்தார். அஃதாவது அத்திருவாய்மொழி ஒன்றற்கொன்று இயைபின்மையாகிய ஸம்பந்தமேயுளதென்பதாம. அசங்கதிரேவ சங்கதி என்பதற்குத் திருஷ்டாந்தமாகவே இவ்வரலாறுரைக்கப்பட்டது.

உ-ம். பாட்டு—திசைக்கின்றதே.

(45) பிள்ளையுறங்காவில்லிதாசர் குடிமகனொருவனுக்கு ஐயனார் ஏறிவலித்தாலிந்தவாறே, "உனக்கு வேண்டுவதென்" என்று கேட்க, எனக்குப் பாலும்பழமுமாக உண்ணவேணும; சாந்தும புழுகும் பூசவேணும்; நல்ல புடவையுடுக்கவேணும்; நல்ல ஆபரணம் பூணவேணும; தண்டேறவேணும்; அணுக்கனிடவேணும் என்ன, அவர்களும் அப்படியே செய்கிறோமென்று பிள்ளை திருமாளிகையிலே வந்து, சாந்து, புழுகு, ஆபரணாதிகளை வாங்கிக் கொண்டுபோய் அவற்றை அலங்கரித்து சாந்தியும் பண்ணிவிட்டு வந்த அவ்விரா பண்டையிலுமிரட்டியாக அவனை வலிக்க, இதென் என்று கேட்க பிள்ளை சாத்துகிறவற்றையெல்லாம கொண்டுவந்திகோள; அவர்க்குச் சாத்துகிற அணுக்கனை இட்டிகோள்; நான் அதின்கீழே போவேனோ? என்னை வெயிலிலே கொண்டுபோனிகோள்; என்னுடம்பிலே நெருப்பை வழியடினாப்போலே அவர் சாத்துகிறவற்றை பூசினிகோள்; அரிகண்டமிட்டாப்போலே அவர் சாத்துகிற வாபரணத்தைப் பூட்டினிகோள்; நீங்கள செய்த செய்லுக்கு இவனைக்கொண்டல்லது போகேன என்று வலித்ததாம்.

(தொடரும்).

ப. அ.

---

(45) இவ்வாலாறு, பகவத விஷயத்தில் வியாமோகமுடைய ஆழ்வாராகிய நாயகிக்குண்டாகிய தெய்வநன்னோயின் காரணத்தை யறியாத தாயானவள் சாமான்ய தேவதாவிஷயமான சாந்தி செய்யதொடங்கியபோது உயிர்த்தோழியானவள் இப்பொழுது செய்ய முயன்ற இந்தச் சாந்தியால் இந்நோய் பரிகாரமாகாது, பகவத் விஷயத்தை இவள் செவிகேட்குமபடி சொனனால இவள நோய ஒழியும. இங்ஙனமிருக்க நோயின மூலம் தெரியாமல நீஙகள செய்கின்ற பரிகாரத்துக்கும் இவள் நோயக்கும் யாதொரு சம்பந்தமில்லை. இஃதல்லாமலும் பகவத் விஷயத்தில் அந்வயமுடையார்கள் இருக்கும இடத்தில் இதாதேவதைகள் வந்து புகுாமாட்டா. என்ற இடத்தில் குறிப்பிடபபெற்றுளளது. ஐயனார்-சாஸ்தா, ஏறிவலித்து நலிந்தவாறே - ஆவேசித்துத் துனபுறுத்தியவாறே, தண்டேற வேணும்-சிவிகையேறவேணும், அணுக்கன்-கொடை, அரிகண்டம்-இருப்புச்சட்டத்தில் செய்ததோர் கருவி.

ஸ்ரீ:

அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(40-ம் பக்கத்தொடர்ச்சி).

“ஸாஹஸோதாரவலோத்யோகம் ஸுக்ரீவஸ்யவஸம்ப்ரமம்,
ஸீலமாஸாத்ய ஸீதாயா மமாபி ப்லவனம் மஹ:”

“ஸபலோ ராகவோத்யோக: ஸுக்ரீவஸ்யசஸம்ப்ரமங்,
சீலமாஸாத்யஸீதாயாமமாபி ப்லவனம்மஹ:”

பிராட்டிக்குப் பாதிவ்ருத்யம் குறையாதிருக்கையால் மஹாராஜருடைய யத்தனமும், பெருமாளுடைய முயற்சியும் ஸபலங்களாயின. பாதிவ்ருத்யத்திற்குக் குறைவு நேர்ந்திருக்குமேல் இவர்களுடைய யத்தனங்கள் வியர்த்தங்களாமென்பது கருத்து. என்னுடைய மனஸும் அவளுடைய பாதிவ்ருத்தியங்கண்டு ஈடுபட்டுவிட்டது. ஆனால் பாதிவ்ருத்யம் பிராட்டிக்குளதாகில் இராவணன் எடுக்கும்போது அவன் பஸ்மமாகாமைக்குக் காரணம் என்? என்று சங்கைவர “தபஸா தாரயேல்லோகாந் க்ருத்தோ வா நிர்தஹேதபி, ஸர்வதாதிப்ரவ்ருத்தோஸௌ ராவணோ ராக்ஷஸாதிப:, தஸ்ய தாம் ஸ்ப்ருசதோ காத்ரம் தபஸா ந விநாசிதம்” தபஸாதாரயேல்லோகாந் க்ருத்தோவாந்நிர்த்தஹேதபி, ஸர்வதாதிப்ரவ்ருத்தோஸௌராவணோ ராக்ஷஸாதிபங், தஸ்யதாம்ஸ்ப்ருசதோகாத்ரம் தபஸாநவிநாசிதம்” என்று சொன்னார். அதாவது.— இராவணன் தன்னுடைய தபஸாலே லோகமடங்கத்தரிக்கவும், கோபத்தாலே தஹிக்கவும் சக்தியுடையவன்; தபஸாலே மிகவும் விருத்தியுடையன்

தவன்; ஆகையாலே அவனுக்குத் தபஸிருப்பதால் பிராட்டியைத் தொடும்போது அவன் சூரம் தஹிக்கப்படவில்லை; என்றார். 'தபஸாங்விநாசிதம்' என்பதற்கு ராவணஸ்யதபஸா - ராவணனுடைய தபஸாலே அது வஸிமையாகையாலே என்று கருத்து. அப்படியாகில் இராவணனுடைய தபஸைக்காட்டிலும் ஸீதையினுடைய பாதிவ்ருத்யம் பலக்குறைவுள்ளதாகவன்றோ ஆகிற தென்று சங்கைவர "ந த்வக்நி ஸிகா வா க்ஷ்யாத் ஸஸஸ்ஷ்ஷாவாணி நாஸதீ, ஜநகஸ்யாத்மஜா க்ஷ்யாத் யத் க்ரோதகலுஷீக்ருதா" நதக்ஙிகாகுர்யாத் ஸம்ஸ்ப்ரஷ்டாபாணிநாஸதீ, ஜநகஸ்யாத் மஜாகுர்யாத் யத க்ரோதகலுஷீக்ருதா" என்றார்.

அதாவது - பிராட்டி கோபத்தாலே கலங்கி ஒருகாரித்தைச் செய்தாளாகில் அந்தக்காரியத்தை எரிகிற அக்கினி ஜ்வாலையானது கையாலே தொடப்பட்டாலும் அதனால் செய்து தலைக்கட்டமுடியாதென்பதாம். ஆக, பிராட்டி கோபத்தாலே கலங்கி, 'நீபஸ்மமாய் விடுவாய்' என்று வாயாலே சொல்லில் அவன் சாம்பலாயிருப்பன். அவ்வாறு சொல்லவில்லையாதலால் அவன் சாம்பலாகவில்லையென்று சொன்னாராகையாலே இவள் 'பஸ்மீபவ' என்று ஸங்கல்பிக்கவில்லை என்றே கிடைக்கிறபடியால் பஸ்மகாதிருக்கச் செய்தேன் என்கிற அர்த்தம் பொருந்தாதேயெனச் சங்கிக்கவேண்டா.

முதலாவது "ஸஹஸேனாராவணேநேஹ்யாமஃ" "ஸபலோராகவோ த்யோக:" என்கிற முதல் சுலோகத்திற்கும் பிராட்டிக்கும் பாதிவ்ருத்யம் பங்கம் வாராதே யிருக்கிறபடியால் பெருமாள் முதலானாருடைய ப்ரவ்ருத்தி ஸபலம்; இல்லாவிடில் வியர்த்தமாம் என்கிற அர்த்தம் மிகவும் அஸங்கதம். பிராட்டிக்குப் பாதிவ்ருத்ய பங்கத்திற்குப் பிரஸக்தியைக் கல்பித்து அஃதில்லாதிருந்தது நல்லதாய் விழுந்தது என்கிற பொருள் பிராட்டிக்கு எவ்வளவு பெருமைக்

குறைவைக்காட்டும். ஆகையால் அந்த அர்த்தத்தை விட்டொழி வது நலம்.

நிற்க, இங்குப் பேசப்புகுந்த திருவடியின் கருத்து வேறாகும். அதாவது, 'நாம் பிராட்டியைக் கண்டோம்; ஆனால் அவளை அழைத்துவரவில்லையென்று பெருமாள்திரு முன்பே சொல்லுவது சூரர்களான நமக்குக் குறைவாகும்; நாமெல்லோரும் லங்கை யடைந்து ராவணனை வதைத்துப் பிராட்டியுடன் சென்று பெரு மாளை ஸேவிக்கவேண்டும்' என்பதாம்.

அதையே இவர் மேலே சொல்லுகிறார்.—அப்படி நாம் போய் ஜயித்து மீண்டுவருவது ஸாத்யமாகுமா? பெருமானுடன் சென்றால் அவனுடைய அஸ்திரங்களையும், படைகளையும் வெல்வது எளி தாகுமென்று கருத்து விளையுமெனக்கொண்டு அதற்காக முத லிலே கையிடுகிறார் 'ஸபல' இத்யாதியால். அதாவது - நம்மிலும் வல்லவராக நாம் கருதிய பெருமாள் மஹாராஜர் இவர்கள் ப்ரயா ஸம் அங்குப் பலிக்கவேண்டுமானால் "ஶீலமாஸாத்யஸீதாயா:" "சீலமாஸாத்ய ஸீதாயா:" அதாவது - பிராட்டியின் பாதிவ்ருத் யாக்னியின் ஸஹாயங்கொண்டே ஆகவேண்டும்; அதுவே நமக்குத்துணைசெய்யு மென்பதாம். நான் தனித்துச் சென்றபோது ஜயித்து மீண்டு வந்ததும் நான் அதைத் துணைகொண்டே "மாமிப்ரவணம்மந:" "மமாபிப்ரவணம்மந:" என் மனமும் அதைச் சரணமாகக் கொண்டது என்றார்.

இப்படி பாதிவ்ருத்யாக்னி துணை செய்யுமோ? இதின் தன்மை எத்தன்மையுடையது? என்று சங்கைவர "தபஸா" இத்யாதியாலே பேசுகிறார்.—அதாவது - ராவணன் பெருமையைப் பேசி அதடியாகப் பிராட்டியின் பெருமையைப் பேசுகிறார். 'ராவ ணன் வீரத்தன்மையைக் கொண்டாடுவது பெருமாள் வீரத்திற்குப்

புகழ்வதுபோல இங்கும் ராவணன் பெருமையைப் பேசுவது பிராட்டியின் பெருமைக்காக. அதாவது - ராவணன் தன் தபஸ்ஸு கொண்டு லோக மடங்கத்தரிக்கவும், தன் கோபத்தால் அவ்வுலோக மடங்கத் தஹிக்கவும் சக்தியுடையவன்; தபஸில் மிகவும் விருத்தி யடைந்தவன்; அப்படித் தபோபலத்தையுடைய அவனுடைய சரீரம் பிராட்டியைத் தொடும்போது பிராட்டியினுடைய தபஸினால் அதாவது - அவள் நினைவின்றி யிருக்கவும், அவளுடைய பாதிவ்ருத் யாக்கினியினால் 'நவிநாசிதமிதி' சாம்பலாக்கப்படவில்லை யென்கிற யாதொன்றுண்டு. "ததஸ்தேஜ:ப்ரயுக்தாநுஷ்ட்ராஹாவக்ருதம்" "தத்க்ரோதகாலுஷ்யாபாவக்ருதம்" கோபத்தாலே கலக்கமில்லாமையாலே வந்தது. இங்குத் தபஸ்ஸு என்பதுக்கு இராவணனுடைய தபஸ்ஸு என்று கொள்ளலாகாது. அவனுக்குத் தபஸிருப்பதாக முன்பே காட்டப்பட்டது. மறுபடியும் அதைச் சொல்வது பிரயோஜனமில்லை. ஆகையால் பிராட்டியினுடையதாகக் கொள்ளவேணும்.

அப்போது 'தபஸா' என்கிற பதம் வேண்டாதே விவக்ஷிதார்த்தங் கிடைக்கக்கூடியதாயிருக்கத் தக்கீர்த்தகம் ஒரு பிரயோஜனத்தை உட்கொண்டதாகவிருக்கவேண்டும். பிராட்டிக்குப் பெருமை சொல்வதில் நோக்கமாகில் அதுக்கிடாகப் பொருள் கொள்ளும்போது 'தபஸ்' என்ற சப்தப்ரயோகத்துக்கு இவளுடைய ஸங்கல்பத்தை விலக்குவது பிரயோஜனமாகக் கொள்ள வேண்டும். அப்போது இவள் நினைவின்றிக்கே பாதிவ்ருத்யம் தஹிக்கவல்லது என்று கிடைக்கும். அப்படி அது தஹிக்காமைக்குக் காரணம் வேண்டும். அஃதியாதெனின்,— "க்ரோதகாலுஷ்ய பாவம்" என்பது மேலே விளங்குகிறது. "நதகக்ஙிஸிகா" இத்யாதியில் இவன் க்ரோதத்தால் கலங்கிச் செய்கிற கார்யத்தை எரிகிற அக்கினியால் தொடப்பட்டாலும் செய்துதலைக்காட்ட

மாட்டாது என்று இவள் பெருமையை விரித்துக்காட்டிவிடத்து அக்கினி சிகைக்கு 'ஸம்ஸ்ப்ருஷ்டா' என்று விசேஷணமிட்டு இவளுக்கு அவ்விசேஷணமிடாதே 'க்ரோதகலுஷி க்ருதா' என்று விசேஷணமிட்டிருப்பதால் இவளுக்கு ஸ்பரிசம்வேண்டா; கோபத்தால் இவளுக்குக் கலக்கம்வரில் அப்போது நிகழும் காரியம். ஸம்ப்ருஷ்டா-ஸம்யக் ஸ்ப்ருஷ்டா-நன்றாய்த் தொடப்பட்ட அக்கினிசிகை செய்யச் சக்தியற்றது; என்றபோது தொடப்படாமலிருக்கவும் தஹிக்கவல்லது என்று கிடைக்கும்.

அப்படிப்பட்ட பாதிவ்ருத்யாக்கினி தொட்டவிடத்திலும் கூட தகிக்காமலிருப்பதற்கு ஹேது க்ரோதகாலுஷ்யாபாவமேயாம். ஆகையால் "நவிநாசிதமிதியத், தத்ரோத காலுஷ்யபாவக்ருதம்" "நவிநாசிதமிதியத், தக்க்ரோத காலுஷ்யபாவக்ருதம்" என்று அத்யாஹாரம் பண்ணிக்கொள்ளவேண்டிற்று. ஆனால் க்ரோதகாலுஷ்யமுண்டாகில் தஹிக்குமுறை 'பஸ்மீபவ' என்று ஸங்கல்பிக்க வேண்டுமோவென்னில்? அன்று. கலக்கமில்லாதபோது நம்முடைய ரக்ஷணம் நமக்கேயாம்போது நம் ஸ்வரூபத்துக்குச்சேராது. ஆகையால் நாம் இவனை 'பஸ்மீபவ' என்று ஸங்கல்பிக்கலாகாது; எனத்தோற்றுவதுபோல மேலே சொல்லப்படுவதும் தோற்றக்கூடியதே.

அஃதாவது.—'நம்முடைய ஸங்கல்பமில்லாவிடினும் இயற்கையாயுள்ள தாஹகத்வசக்திகொண்டு பாதிவ்ருத்யாக்கினி இவன் அணுகியபோது தஹிக்கவல்லதாயிருந்தபோதும், அதுக்கும் நம்முடைய சக்திவிசேஷமே காரணமாகையால் ஸ்வரக்ஷணத்வயம் அப்போதும் தப்பாது. ஆகையால் பாதிவ்ருத்யாக்கினிக்குள்ள சக்தியைக் குலைத்துவைக்கவேண்டும் என்கிற நினைவுண்டாகையால் ராவணனுக்குச் 'சீதோபவ' என்று பாதிவ்ருத்யாக்கினியை நோக்கிச் சங்கல்பண்ணினளாகக் கொள்ளவேண்டி வருகிறது.

கலக்கமுள்ளதாகில் இப்படி ஸ்வாகூதானுங்வயம் ஒருவகையா லும் ஸம்பந்திக்கத்தகுதியன்று என்கிற நினைவுண்டாகக் காரண மில்லாமையாலே இவனனுகியபோது அது தன்னடையே தஹித் தல்லது நில்லாது. ஆகையால் க்ரோதகாலுஷ்யமுண்டாம்போது இவனுடைய தஹநம் இவள் நினைவின்றிக்கே வரக்கூடியதாகையா லும், அப்படி க்ரோதகாலுஷ்யமில்லாமையாலே ஸ்வரூபத்தில் தெளிவு உறைத்திருக்கையால், அவன் சாம்பவாகாதிருந்தான் என்கையாலும் பிராட்டி தவப்பெருமை மிகையெனக் கூறிற்று.

ஆக, பிராட்டி சீலம் நமக்குத் துணைசெய்யத் தகுதியுள்ள தெனக்கூறி லங்கை புகுந்து இராவணனை ஜயித்து மீளலாந்துணி வுண்டாகத் திருவடி கூறியமுறைக்கு, "நத்வாகுர்மி" இத்யாதி சுலோகத்திற்குச் சொன்னபொருள் ஒருவகையாலும் விரோதிக் காது ; இந்தப் பொருளுக்கு ஒற்றுமையுடையதாகும்.

இஃதிங்ஙனமாகிறது.—பெருமானைப் பெற்றுச் சந்தோஷ மடையலாமுறைக்குப் பிராட்டி வேண்யுத்க்ரதனத்தில் ப்ரவ்ருத்தை யாயிருக்கத் திருவடி அதுகண்டு கலங்கி, 'நாம் மீண்டுவருமளவும் இனி இவள் தரித்திருக்கமாட்டாள்; ஆகையால் இவளுக்கு ராம விருத்தாந்தத்தைச் சொல்லித் தரிக்கச்செய்து போகவேண்டும் எனத்துணிந்து ஒருவாறு இவள் கேட்கும்படி பிறரறியாவண்ணம் உரைக்க, இவள் கலங்காது தெளிந்து இவரிடம் ராமசரிதம் கேட்ட பின்பே உயிர் தரித்தாள். ஆகையாலே இவள் நிஷ்டைக்கு அது குறைவாகாதோவெனின்,— ஆகாது.

இங்கு ஒன்று ஆராயவேண்டும். தக்ஷன் புதல்வியாகிய ருத்ரன் பத்நியானவள், தக்ஷன் செய்யும் யாகத்திற்கு வந்து தக்ஷனால் அவமதிக்கப்பட்டபோது அவள் யோகாக்னியைக்

கொண்டு தன்னுடைய சரீரத்தைத் தஹித்துக்கொண்டு உயிர் துறந்ததுபோல் செய்யாது அல்ப ஜ்ஞாநம்கொண்டு பரலோகபீதியுடையாரும் எவ்வளவு ஆபத்தசையிலும் துர்மரணமென்று கைவிடக் கூடிய உத்க்ரதனத்தில் நிஷ்க்ருஷ்ட ஜ்ஞாநபூர்த்தியுடைய இவள் ஒருப்பட்டாளானபோது ஸ்வகையில் உண்டான ஹிம்ஸை எல்லை கடந்ததெனத் தெரிகிறது. ஆனால் அந்த ஆபத்தசையில் திருவடி வாயுரைகொண்டு தெளிந்தாளென்பதில்லை. அதற்கு முன்னரே பிராட்டி தெளிந்து அது தகாதெனக்கொண்டு அதனை ஒழித்தாளென்று பேசினாருஷி.

“𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌰𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌃 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌂 𑌸𑍍𑌵𑌂𑌚𑌕𑍁𑌲𑌂 𑌶𑍁𑌭𑌾𑌙𑍍𑌗𑍍𑌯𑌾𑌃, 𑌶𑍋𑌕𑌾𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌤𑌥𑌾𑌬𑌹𑍂𑌨𑌿 𑌧𑍈𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰𑌾𑌣𑌿 𑌲𑍋𑌕𑍇, 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌤𑌦𑌾𑌬𑌭𑍂𑌵𑍁𑌃” “தஸ்யாஸ்துராமம் ப்ரவிசிந்தயந்தோ: ராமாநுஜம் ஸ்வம்சகுலம் சுபாக்யா:, சோகாநிமித்தாநி ததாபஹூநி தைர்யார்ஜிதாநி ப்ரவராணி லோகே, ப்ராதுர்நிமித்தாநி ததாபபூவு:” என்று பேசினர். இப்படி உத்க்ரதனத்தில் ப்ரவருத்தையாய்ப் பெருமாள் இளையபெருமாள்களின் குலத்தைச் சிந்திக்குமவளுக்குத் தைரியத்தை யுண்டுபண்ணக்கூடிய நல்ல நிமித்தங்கள் உண்டாயின; என்றார். இதனால் பிராட்டி தனக்குத்தகாதென மீண்டாளென்பதும், அப்படி மீளுகைக்குக் காரணமும் காட்டப்பட்டன.

தொடரும்.

ஸ்ரீ:

மதிப்புரை.

ஸ்ரீராமாநுஜர் சரித்திரம் :—“ மலையிட்டதீபமென மால்சமயத்தை மண்மேல், நிலையிட்ட”வராகிய ஸ்ரீராமாநுஜப் பெருந்தகையாளரை வைணவசமயத்தவர்மாத்திரமின்றி ஏனையோர்களும் இவரது அருட்பெருங்குணம், நற்செயல், நுண்மாணுழைபுல முதலியவற்றை யுன்னியுன்னிப் புகழ்ந்துகொண்டாடாநிற்பர். இங்ஙனம் யாவராலும் போற்றத்தகும் பெற்றிமை இவர்பானிறைந்துள்ளதென்பதை யாவருமறிவர். இஃதன்றியும், ஸ்ரீவிசிஷ்டாத்வைத சித்தாந்தச்சார்பினருக்கு இவரே ப்ரதானாசார்யராய் விளங்கினாராதலால், முன்னுள்ள ஆன்றோர்கள் “ திவ்யஸூரி சரிதம் ” “ ப்ரபந்நாம்ருதம் ” முதலிய நூல்களில் இவரது வைபவத்தைப் பரக்க வெளியிட்டுள்ளார்கள். மேலும், மொழியைக்கடக்கும் பெரும்புகழினராகிய கூரத்தாழ்வான் அருமைச் சிஷ்யராய் விளங்கிய அமுதனென்ற பெரியார் தம்மமுதவாக்காலருளிய “இராமாநுஜநூற்றந்தாதி” யிலும் இவரது தெய்வப்பெருஞ்செயன் முதலியன பேசப்படுகின்றன.

இங்ஙனம் பல்வேறு நூல்களில் விரிந்துகிடந்த இவரது வரலாற்றை மதுரைக் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் ஒருங்குதொகுத்து ஸ்ரீராமாநுஜ சரித்திரம் எனப்பெயர் புனைந்து தெள்ளிய தமிழ்நடையில் எழுதி வெளியிட்டுள்ளார். இதுவும் தமிழுலகிற்கோர் நல்விருந்தாகும். இதில், தொன்மையோரது கொள்கைக்கிணங்க இராமாநுஜருடைய அவதார முதலாக எல்லா முறைபிறழாது எழுதப்பெற்றுள்ளன. பிற்பகுதியில் சில ஆராய்ச்சிக் குறிப்புக்களும் வரையப்பட்டுள்ளன. ஆதலால் இராமாநுஜருடைய வைபவத்தை நன்கறிந்துகொள்வதற்கு இந்நூல் பெரிதுந்துணையாயிருக்கும். இன்னும் ஆங்கிலக் கலாசாலை மாணவர்கட்கும், வடமொழியிற் பயிற்சியில்லாதவர்கட்கும் இது பெரும்பயனைப்பயக்கும். இதன் விலை அணா 10. வேண்டுவோர் கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.

விலாசம் :—

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
ஸ்ரீ கோபால் மஹால், மதுரை.